தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 31, ஆங்கீரச-திருவள்ளுவர் ஆண்டு 2024

1993, ஏப்ரல் 13, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல."

விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு எப்போதும் எவ்விடத்திலும் துன்பம் இல்லை.

1. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள், வினா எண் 321, திரு அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

321—

ஆதிதிராவிடர் வீட்டுமனை பத்திரப்பதிவிற்குக் கட்டணச் சலுகை அளித்தல்.

** 16285* திரு. அ. பாப்பா சுந்தரம்:

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர் வீட்டுமனை வாங்கி நிலம் பத்திரப்பதிவிற்கு சதுர அடி கணக்கில் செய்யும்போது அதிகத்தொகை வருவதால் அவர்களுக்கு பத்திரப்பதிவுக் கட்டணச் சலுகை அளிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பதிவுத் துறையில், பதிவுக் கட்டணம், பத்திரக் கட்டணம், முத்திரைத்தாள் கட்டணம் என்று இருக்கிறது. பதிவுக் கட்டணம் யாருக்கும் விதிவிலக்கு கொடுப்பதில்லை

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டது பதிவுக் கட்டணம் என்று கேட்கவில்லை, முத்திரைத்தாள் கட்டணம் என்றுதான் கேட்டிருந்தேன். பதிவுக் கட்டணம் என்பது சொற்பத் தொகைதான். முத்திரைத்தாள் கட்டணம் தான் அதிகமாக வருகிறது. ஏழை எளியவர்கள் கிராமங்களிலே ஆதிதிராவிடர்களாக இருந்தாலும் சரி, பிற்படுத்தப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, சென்ட் ரூ. 200 ரூபாய்க்கு வாங்குகின்ற நிலங்களுக்கு, 5 சென்ட் வாங்குகின்றார்கள் என்றால், சதுர அடி கணக்குப்போட்டு, சதுர அடி 5 ரூபாய், 6 ரூபாய் என்று 2 ஆயிரம் ரூபாய் ரேட்டுக்கு பதிவுத் தாள் வாங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே, நிலம் வாங்குவதற்கு அதிகமாக அந்தத் தொகை வருவதால், ஏழை எளியவர்கள் மிகவும் கஷ்டப்படுகின்ற நிலைமை இருப்பதால் ஆதிதிராவிடர் மக்களுக்காவது அந்தச் சலுகை, பத்திரத்தாள் சலுகை அளிக்க அமைச்சர் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப் பதிவுக் கட்டணம் யாருக்கும் தள்ளிக் கொடுக்கவில்லையென்று சொன்னேன். முத்திரைத்தாள் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு மட்டும் முத்திரைத்தாள் தள்ளுபடி 1,53,20,029 ரூபாய்க்கு தள்ளிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தள்ளுபடி கொடுக்கிறபோது, தனியாக மனுச் செய்கிறபோது, அந்தச் சங்கங்கள் ஆதிதிராவிடர் சங்கமா, கூட்டுறவுச் சங்கமா, அது மக்களுக்குத் தொடர்புடைய நன்மை செய்கிற சங்கமா என்று பார்த்து தனிப்பட்ட முறையில் அவைகளையெல்லாம் பார்த்து அதற்குத் தகுந்தபடி பதிவு செய்யப்படுகிறது. ஆதிதிராவிடர் சங்கங்களுக்கு மட்டுமே தாட்கோ மூலம் சென்ற ஆண்டு மட்டும் 46.89 இலட்சத்திற்குத் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. யார் யார் மனுச் செய்திருக்கிறார்களோ, அந்தத் தன்மைக்கு ஏற்றவாறு முத்திரைக் கட்டணம் தள்ளுபடி செய்யப்படுகிறது.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சங்கங்களுக்காக மட்டும் கேட்கவில்லை. தனியார்கள் வீட்டுமனை வாங்கும்போது, ஆதிதிராவிடர் மக்கள் அங்கே பக்கத்தில்

1993 ஏப்ரல் 13]

இருக்கின்ற நிலங்களை வாங்கும்போது, அரசு அதை எடுத்து வழங்கவேண்டுமென்று கூறும்போது காலதாமதம் ஏற்படுகிறது. அதன் காரணமாக ஏக்கருக்கு ஆயிரம், இரண்டாயிரம் கொடுத்து நீங்கள் விலைக்கு வாங்கிவிடுங்கள் என்று சட்டமன்ற உறுப்பினர் கூறி அந்த நில உடமையாளரிமிருந்து வாங்கிக் கொடுத்து பத்திரத்தாள் பதிவு, 5, 6 சென்ட் என்று பிரித்து ஒவ்வொருவருக்கும் கொடுக்கும்போது, பத்திரப்பதிவு செய்யும்போது, பெரிய தொகை வருகின்ற காரணத்தால் அந்தக் கேள்வி கேட்டேன். அவர்கள் பத்திரப்பதிவு செய்ய முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே, அந்த 5 சென்ட் நிலத்தை மதிப்பீடு போட்டு, பத்திரத்தாள் வாங்கினால் பரவாயில்லை. ஆனால் கூடுதலாக சதுரஅடி போட்டு, பெருக்கிச் சொல்கிறார்கள், பத்திரப்பதிவு அதிகாரிகள். ஆகவே, அந்தப் பத்திரத்தாள், அந்தப் பதிவு ஆகிய இரு கட்டணங் களையும் ஆதிதிராவிடர்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், அந்த நிலத்தினுடைய மதிப்பை மட்டும் போட்டுத்தர முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவுத்துறை என்பது நீண்ட பல காலமாக இருக்கின்ற ஒரு துறை. யார் எது வேண்டுமானாலும் நினைத்த மாத்திரத்தில் சொல்லவும் முடியாது, செய்யவும் முடியாது. அதனால் பத்திரக் கட்டணம் என்பதற்கு ஒரு வழிகாட்டி முறையே இருக்கிறது. அந்த வழிகாட்டியில் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறதோ, அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிற தொகையைத்தான் கேட்பார்கள். அது மட்டுமல்லாமல் ஏதாவது அமைப்பு மூலமாக அவர்கள் வந்து வாங்கி யாராவது இலவசமாக தர்மத்திற்காகக் கொடுத்திருந்தால், உதவி செய்தால், அதைத் தெரிவித்தால் உடனே தள்ளுபடி செய்து கொடுக்கிறோம். கீழே உள்ளவர்கள் தள்ளுபடி செய்யவில்லை என்றாலும், அரசை அணுகினால், அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

முற்பகல் 10.05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேராசிரியர் க. பொன்னுசாமி.

பேராசிரியர் க. பொன்னுசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைகளை அரசு கையகப்படுத்தித் தரும்போது அவர்கள் இலவசமாக அதைப்பெற்று விடுகிறார்கள். அப்படி இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் பெறுவதிலே காலதாமதம் ஏற்படுவதாலும் அதனால் அவர்களுக்குக் கிடைக்கிற சலுகைகள்

தாமதப்படுவதாலும் அவர்களே முன்வந்து வாங்குகின்றபோது அரசு ஏற்கெனவே கையாள்கிற முறையைக் கையாண்டு அவர்கள் பத்திரங்களைப் பதிவு செய்வதற்கு முத்திரைத்தாள் கட்டணத்திலிருந்து விதிவிலக்கு அளிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களே முன்வந்து பணம் கொடுத்து வாங்குகிறார்கள் என்றால் அப்போது-ஆதிதிராவிடர்கள் என்றால் எல்லோருமே ஏழை அல்ல, சில வசதிக்காரர்கள், பெரிய, பெரிய தொழில் செய்கிறவர்கள். அவர்களே முன்வந்து வாங்குகிறார்கள் என்கிறபோது-அது தனியாகப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. போளூர் வரதன்.

திரு. போளூர் வரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், ஆதிதிராவிடர்கள் வசதி படைத்தவர்கள், அவர்களாகவே முன்வந்து நிலத்தை வாங்குகிறார்கள் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. அப்படிச் சொல்ல வில்லை, ஒருசிலர் என்றுதான் சொன்னார்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்கள் வசதி படைத்தவர்கள் என்று நான் பொத்தாம்பொதுவாகச் சொல்லவில்லை. நான் சொல்லுகிறபோது சொல்கிற வார்த்தைகளை முன்னுக்குப்பின் மாற்றிப்போட்டால் கூட தவறாக வந்துவிடும்.

திரு. போளூர் வரதன்: ஒருசிலர். ஆனால் இன்றைக்கு தாட்கோ மூலம் கட்டப்படுகிற வீடுகளுக்குப் பட்டா வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உத்தரவு கடுமையாகப் போட்டு இருக்கிறார்கள். தொன்றுதொட்டு வாழ்கிற ஆதிதிராவிட மக்கள் நத்தம் புறம்போக்கு, சேரிப் புறம்போக்கு, மேய்க்கால் புறம்போக்கு போன்ற பகுதிகளில்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அப்படி வாழந்து கொண்டிருக்கிற இடங்களில் பட்டா என்று இன்றைக்கு வருகிற போது (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாட்கோ வீடுகள் என்கிறீர்கள், தொகுப்பு வீடுகள். தாட்கோ வீடுகள் அல்ல. (குறுக்கீடு) இதில் ஒன்றும் இல்லை. இதைத் திருத்திக் கொள்ளலாம். (குறுக்கீடு) அதுதான் இல்லை என்று சொல்லியாகிவிட்டதே.

1993 ஏப்ரல் 13]

திரு. போளூர் வரதன்: பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகள். இந்த நிலை இருக்கிறது. நம்முடைய துணைச் சபாநாயகர் பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டதுபோன்று கிராமப்புறங்களில் இருக்கிற ஆதிதிராவிடர்கள் 500 ரூபாய், 1000 ரூபாய்க்கு வீட்டுமனைகளை வாங்கி அதிலே வீடு கட்டிக்கொள்கிற சலுகைகளைப் பெறவேண்டும் என்று சொல்கிறபோது, அரசினுடைய முத்திரைத்தாள் கட்டணம் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் அவர்கள் வாங்குகிற நிலத்தினுடைய விலையைக்காட்டிலும் பதிவு செய்கிற பத்திரத்தினுடைய விலை அதிகமாக இருக்கிறது. ஆகவே அந்த நன்மையை அந்த மக்கள் பெற முடியாமல் போகிறது. ஆகவே, தமிழகத்தில் இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள் வீடு கட்டுகிற காரணத்திற்காக வாங்குகிற நிலங்களுக்கு முத்திரைத்தாள் பதிவுக் கட்டணத்தை அரசு ரத்துச் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொன்னபடி வழிகாட்டி நெறிமுறை இருக்கிறது. அந்த வழிகாட்டி நெறிமுறையில் அங்கே இருக்கிற நிலத்தினுடைய விலையைவிடக் கூடுதலாக இருக்க முடியாது. அதை நன்றாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் நீங்கள் தனியாக ஆதிதிராவிடர்களுக்குத் தனிச் சலுகை வேண்டுமென்று பொதுவாகக் கேட்கிறபோது நான் மனம் உவந்து அதை ஆராய்கிறேன். ஆனால் கொள்கை அறிவிப்பைக் கேள்வி நேரத்தில் தெரிவிக்கக்கூடாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ.கு. தமிழரசன்.

திரு. செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீகார் மாநிலத்தில் உள்ளதுபோல் 3 ஏக்கருக்கு உட்பட்ட தாழ்த்தப்பட்டவரிடமிருந்து யாரும் நிலங்களைப் பெறுகிறபோது அரசாங்க அனுமதியுடன்தான் அதை வாங்க முடியும் என்கிற சட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டுவருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல மாநிலங்களைப் பற்றியெல்லாம் எனக்கு எந்தத்தொடர்பும் இல்லை; எனக்குத் தெரியவும் தெரியாது. தமிழ்நாட்டில் இருப்பது மட்டும்தான் எனக்குத் தெரியும். அங்கெல்லாம் இருக்கிறதா, இல்லையா என்று உதாரணம் கூடக்காட்ட வேண்டியதில்லை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் . . . ஆதிதிராவிடர்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று சொன்னால் இந்த அரசு செய்வதற்குத் தயாராக

இருக்கிறது. அதற்காக வேறு ஒரு உதாரணத்தைத் தேடி அலையத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 322, டாக்டர் சு. மணிமேகலை, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

322—

கண்டிராதித்தம் கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை அரசினர் உயர்நிலைப்பள்ளியாக மாற்றல்.

* *9665* டாக்டர் சு. மணிமேகலை:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், திருமானூர் ஒன்றியம், கண்டிராதித்தம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியை அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளியாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

திருச்சி மாவட்டம் திருமானூர் ஒன்றிய கண்டிராதித்தம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியை 1992-93-ம் கல்வி ஆண்டில் உயர்நிலைப்பள்ளியாக மேம்படுத்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

முற்பகல் 10.10

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமானூர் ஒன்றியம், கண்டிராதித்தம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியை அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளியாக மாற்றித்தரும்படி 4-7-1991, 12-3-1992, 4-8-1992 ஆகிய தினங்களில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும், மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களிடத்திலும் விண்ணப்பித்திருந்தேன். எனது கோரிக்கையை ஏற்று அதை உயர்நிலைப்பள்ளியாக மாற்றித் தந்த எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன். பெண் கல்வியில் மிகவும் பின்தங்கிய திருமானூர் பகுதியில் பெண்களுக்கு என்று இதுவரை ஓர் உயர்நிலைப்பள்ளிகூட இல்லை. பெண்கள் நலனில் தனிக் கவனம் செலுத்தும் புரட்சிகரமான திட்டங்களைச் செயல்படுத்தும் எங்கள் புரட்சித் தலைவியின் அரசு இந்தப் பள்ளியை மகளிர் உயர்நிலைப்பள்ளியாக மாற்றித் தர நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊரிலே இருக்கின்ற ஒரே ஒரு பள்ளியையும்